**பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு - 2014**

---

பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 யூன் 03 ஆந் திகதிய அமப/10/0958/438/001 இலக்க அமைச்சரவை அங்கீகாரத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை தாபித்தல்**

---

கடற்தொழில் மற்றும் நீரியல்வள அமைச்சரினால் 2010 மே 14 ஆந் திகதி முன்வைக்கப்பட்ட பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை தாபிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் 2010 யூன் 03 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 நவம்பர் 30 வரையிலும் நியதிச்சட்ட நிறுவகமொன்றாக சட்டவாக்கப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதியினை நிச்சயிக்கும் போது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எதிர்பாராத நிகழ்வுகளின் தாக்கம் மதிப்பிடப்பட வேண்டுமெனினும் ரூபா 49,433,863 பெறுமதியான பெற வேண்டிய கடை வாடகை வருமானமானத்தின் அடிப்படையில் ஏற்படக்கூடிய ஐயக்கடன்களுக்காக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்தொன்று பாவனைக்கு எடுக்கக் கூடிய நிலைக்கு உட்பட்ட சந்தர்ப்பம் முதல் பெறுமானத் தேய்விடல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட மீதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்**

கழிவுப் பொருட்கள் சுத்திகரிக்கும் இயந்திரக் கூடம் கட்டத்தின் கிரயம் மற்றும் இயந்திரத்தின் கிரயம் என்பவற்றை வெவ்வேறாக இனங்கண்டு பொருத்தமான விகிதாசாரத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்வதற்குப் பதிலாக ரூபா 38,078,646 தொகையான இயந்திரம் மற்றும் கட்டிடம் என்பவற்றின் மொத்தக் கிரயத்தில் 5 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளி வழங்குனருக்கு விநியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 83,588 தொகையான அடையாள அட்டை இருப்புக்களின் செல்லுபடிக்காலம், 2012 ஏப்ரல் 30 ஆந் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும், அதனைக் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பெற வேண்டிய மீதியொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கழிவுப் பொருட்களைச் சுத்திகரிக்கும் இயந்திர கூடத்தின் (Treatment Plant) பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 194,208 தொகையை செலவினமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) வழுக்களுடன் கணிப்பீடு செய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் என்பன முறையே ரூபா 803,924 மற்றும் ரூபா 408,414 இனால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே நிலையான வைப்பு வட்டி வருமானத்திற்குரிய ரூபா 761,214 தொகையான நிறுத்தி வைத்தல் வரியைக் கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டில் ரூபா 433,950 தொகையான மூலதனச் செலவினங்கள் வருமானச் செலவினமாகக் பதியப்பட்டதன் தவறு, மீளாய்வாண்டின் போது சீராக்கப்பட்டிருந்த போதிலும் அதன் தாக்கத்தை முன்னோக்கிய ரீதியில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மொத்த விற்பனைத் தொகுதியில் தரைக்கு நிரந்தரமாக காபட் இட்டு வர்ணப் பூச்சிடுவதற்காக முன்னைய ஆண்டில் ரூபா 3,244,760 செலவிடப்பட்டு செலவிடப்பட்ட அந்தத் தொகை மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் அது தரமான நிலையில் 03 மாதங்களுக்கு குறைவான காலமே காணப்பட்டமையால் கணக்குகளில் அதற்காக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிச்சயமற்ற வாடகை வருமானம் ரூபா 588,000 தொகை நிதிக்கூற்றுக்களில் வேறாகக் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக பெற வேண்டிய வாடகை வருமானத்தில் கழித்து தேறிய பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------

கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் கீழ் முன்னைய ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற 05 கம்பனிகளுக்குரிய ரூபா 5,446,663 கூட்டுத்தொகையான மீதியை மீளாய்வாண்டின் இறுதியின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு சாசனம் 8(9) | முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்புக் கூட்டம் மாதத்திற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக 06 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு | தொடர்புடைய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ‘‘நம்பிக்கைப் பொறுப்பு’’ வருமானவரிக் கடப்பாட்டிற்கு உட்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2013 இன் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டம் | |
| (i) 10 ஆம் பிரிவு | நம்பிக்கை பொறுப்பு பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 22 (2) ஆம் பிரிவு | (i) நம்பிக்கை பொறுப்பின் உள்ளீட்டு வரிக்கான வரிச் செலவினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(ii) உள்ளீட்டு அடிப்படையில் செலுத்தப்படும் பெறுமதிசேர் வரி நிதிக்கூற்றுக்களில் வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 3.2 வழிகாட்டி | போட்டியாளர் கேள்வி கோரளின்றி சந்தைத் தொகுதியின் சுற்றாடலில் சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் சிற்றுண்டிச் சாலை நடாத்துவதற்காக தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. அந்த நிறுவனங்களுடன் முறையே 2012 பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் 5 வருடங்களுக்காகவும் 2011 ஏப்ரல் 01 முதல் 10 வருடங்களுக்காகவும், நீண்ட கால உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. |
| (உ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | நம்பிக்கை பொறுப்பின் வருடாந்த பாதீடானது முன்னைய வருடத்தின் செப்தெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டு செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |

**2.5 தேறிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வியாபார நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட பனிக்கட்டி தொழிற்சாலை மற்றும் 4 விற்பனைக் கடைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 5,148,000 தொகையான வருடாந்த வாடகை வருமானத்தை முகாமைத்துவக் கட்டணமாக ஈடுசெய்வதற்கு நம்பிக்கைப் பொறுப்பு சபை தீர்மானித்திருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 27,815,592 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 25,873,482 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,942,110 ஆன வீழ்ச்சியினை காணக்கூடியதாக இருந்தது. பழுதுபார்த்தலும் பராமரிப்புச் செலவினமும் மற்றும் பாதுகாப்புக் கட்டணங்கள் முறையே ரூபா 1,650,711 இனாலும், ரூபா 1,766,265 இனாலும் குறைவடைந்திருந்த போதிலும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,835,740 இனாலும் மோட்டார் வாகனத்தின் வருமானம் ரூபா 687,256 இனாலும் குறைவடைந்தமை மற்றும் சம்பளமும் படியும் ரூபா 2,969,012 இனால் அதிகரித்தமையும் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வாகனத் தளத்தின் வருமானத்தை சேகரித்தல்**

(i) சந்தைத் தொகுதியின் சுற்றாடலில் வாகனத்தளத்தின் வருமானத்தை சேகரிக்கும் நடவடிக்கைகள் நம்பிக்கைப் பொறுப்பினால் இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பின் அங்கீகாரமின்றி கடற்றொழில் கூட்டுத்தாபனம் அந்த செயற்பாடுகளுக்காக மூன்றாம் தரப்பான கம்பனி ஒன்றுடன் 10 வருட நீண்ட கால உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தது.

(ii) 2013 திசெம்பர் 10 ஆந் திகதிய முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு சபை கூட்டத்தின் போது இந்த உடன்படிக்கை திருத்தப்பட்டு 2014 மார்ச் மாதம் வரை மாத்திரம் அமுல்படுத்தப்பட்டு அதன் பின்னர் மீண்டும் கூறு விலை கோரி நிறுவனமொன்று தெரிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், கணக்காய்வுத் திகதி வரையிலும் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கம்பனியின் 2013/2014 மற்றும் 214/2015 ஆம் ஆண்டுகளின் நிதிகூற்றுக்களின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 4,930,948 தொகையான முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் வாகனங்களைத் தரித்து வைத்தல் இலாபத்தின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iv) வாகனத் தளத்தின் வருமானத்திற்காக கம்பனிக்குச் செலுத்திய பெறுமதி சேர் வரியான ரூபா 1,703,342 தொகை மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியான ரூபா 283,890 தொகை என்பன செலவினமாகக் கழிக்கப்பட்டிருந்த

போதிலும் உரிய கொடுப்பனவுகள், வரி அனுப்புதல் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரியதாக கம்பனியால் அறவிடப்பட்டு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட வருமானத்தில், நம்பிக்கைப் பொறுப்பிற்கு அறவிட வேண்டிய ரூபா 18,398,680 தொகை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வியாபார கடைகளின் வாடகை வருமானத்தை சேகரித்தல்**

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வியாபார நிலையமொன்றுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியொன்றை விடக்குறைவாக வாடகை அறவிடப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 36,960,000 தொகை நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ii) நம்பிக்கைப் பொறுப்பிற்குச் சொந்தமான ஆதங்களை வாடகைக்கு வழங்கும் போது மீளச் செலுத்தும் பிணை வைப்பொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கும் மொத்த விற்பனைச்சாலைக்கும் சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது ரூபா 14,020,000 கூட்டுத்தொகையான பிணைப் பணம் உரிய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக அந்த ஆதனங்களுக்கு ஏற்படுகின்ற இழப்பினைத் தீர்த்தல் மற்றும் நிலுவை வாடகையை அறவிடுதல் தொடர்பாக ஏற்படும் ஆபத்துக்களை நம்பிக்கைப் பொறுப்பிற்கு ஏற்க வேண்டியேற்பட்டிருந்தது.

(iii) வாடகைக்கு வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்ட நுகர்வோர் சந்தைத் தொகுதிக் கட்டிடத்தின் மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 14,000 வீதம் 02 கடைகள் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாவனைக்காகவும், மேலும் ஒரு கடை சிற்றுண்டிச்சாலை ஊழியர்களின் பாவனைக்காகவும் கட்டண அறவீடின்றி வழங்கப்பட்டமையால் மீளாய்வாண்டிற்காக ரூபா 504,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

**(இ) சுற்றாடலில் கழிப்பொருட்களை அகற்றுதல்**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சந்தைத் தொகுதியில் அகற்றப்படுகின்ற கழிவுப்பொருட்களை பயன்படுத்தி விலங்குணவு மற்றும் கூட்டுப்பசளை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக மாதாந்த வாடகையின் அடிப்படையில் நிலத்தின் ஒரு பகுதி தனியார் கம்பனியொன்றிற்கு 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி உடன்படிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கை 15 வருடங்களான நீண்ட காலத்திற்கு கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 15 வருடங்களுக்காக அறவிட வேண்டிய மாதாந்த வாடகை போதியளவான பிரகாரம் திருத்தங்களின்றி உடன்படிக்கை கைச்சாத்திட்ட சந்தர்ப்பத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) உரிய கம்பனியின் உற்பத்திகள் மூலப்பொருளாக சந்தைத் தொகுதியில் சேகரிக்கின்ற கழிவுப்பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கியிருக்கும் போது அந்த கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக மாதாந்தம் ரூபா 519,000 வீதம் உரிய கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சந்தைத் தொகுதியின் சுற்றாடலில் அமைந்துள்ள கட்டிடங்கள் சிலவற்றின் அத்திவாரங்களில் கொங்கிரீட் படையின் கீழ் நிலம் கீழிறங்கியிருந்ததுடன் அதனைப் பரீட்சித்து அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்திற்கு ரூபா 628,120 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் நிலத்தை பழைய நிலைக்குச் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சந்தைத் தொகுதியின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் கையளிக்கப்பட்ட கம்பனியுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கையில், சுத்திகரிக்கும் போது உயர் அழுத்த நீரை விசிறும் உபகரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அந்த சுத்திகரிக்கும் நடவடிக்கைகளுக்காக சாதாரண குழாய்கள் பயன்படுத்தப்பட்டமையால் ஏற்பட்ட அதிக நீர் பயன்பாட்டின் காரணமாக மீளாய்வாண்டின் நீர்ப்பட்டியலுக்காக ரூபா 7,077,668 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைக்க வேண்டிய பணம் ரூபா 18,410,373 ஆகக் காணப்படும் போது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பிற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 8,527,521 ஆனமையால் ஏற்பட்ட ரூபா 9,882,852 தொகையான வேறுபாட்டை இனங்கண்டு அதற்கான சீராக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 வெளிப்படையான மோசடிகள்

### (அ) பாதுகாப்பு சேவைக்கான கொடுப்பனவு

(i) சந்தைத் தொகுதிக்கு பாதுகாப்பினை வழங்குகின்ற தனியார் பாதுகாப்பு சேவைக் கம்பனியினால் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு சேவைப் பாதுகாப்பிற்கு 9-12 இடைப்பட்ட அளவிலான உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், 24 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலுக்காக நம்பிக்கைப் பொறுப்பினால் 2011 யூன் 01 முதல் 2013 ஒக்தோபர் 31 வரை ரூபா 17,592,003 (வரி உள்ளடங்களாக) தொகையும், மீளாய்வாண்டில் 04 மாதங்களுக்காக ரூபா 113,100 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக முன்னைய கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணத்தை அறவிடல் தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்பு எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

(ii) 2011 மார்ச் 31 முதல் 2015 மார்ச் 30 வரை 04 வருட காலத்தை மேவுகை செய்யும் வகையில் 2014 சனவரி 08 ஆந் திகதி இந்த பாதுகாப்பு சேவைக் கம்பனியுடன் நம்பிக்கைப் பொறுப்பு உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்ததுடன் 2015 யூன் 30 வரை நம்பிக்கைப் பொறுப்பின் அங்கீகாரத்தின் அடிப்படையிலும் 2015 திசெம்பர் 31 வரை நம்பிக்கைப் பொறுப்பின் அங்கீகாரம் இன்றியும் இந்த உடன்படிக்கையின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிற்றுண்டிச்சாலைக்காக 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,143,868 பெறுமதியான 03 குளிரூட்டிகள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது சிற்றுண்டிச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 128 கடைகளையுடைய நுகர்வோர் சந்தைத் தொகுதியில் 98 கடைகள் கணக்காய்வுத் திகதியான 2015 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது காணப்பட்டன.

**4.4 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் மொத்த விற்பனைக் கட்டிடத் தொகுதியின் தரையில் நியமங்களுக்குப் புறம்பாக வர்ணம் பூசப்பட்டமையால் சில மாதங்களில் அந்த நிறப்பூச்சுக்கள் அகன்றமையின் காரணமாக ஏற்பட்ட ரூபா 2,314,160 தொகையான நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 771,049 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கழிவுப்பொருள் தாங்கி, அந்த நிலத்தை வாடகைக்கு வழங்குவதற்காக அகற்றப்படாமையின் காரணமாக நம்பிக்கைப் பொறுப்பிற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 747,917 ஆகும்.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சந்தைத் தொகுதி ஆரம்பிக்கப்பட்டு 4 வருடங்கள் கடந்திருந்த போதிலும், தேவையான தகவல்களை இனங்கண்டு அங்கீகரித்துக் கொள்வதற்கும், நிறுவனக் கட்டமைப்பினைத் தயாரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆவது அத்தியாயத்தின் 1.2 உப பிரிவின் பிரகாரம் நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு மாத்திரமே நியமிக்கப்பட முடியுமான போதிலும், நம்பிக்கைப் பொறுப்பிற்காக அங்கீகரித்துக்கொள்ளப்படாத பதவிகளுக்காக கடற்றொழில், நீரியால் வள அபிவிருத்தி அமைச்சின் மூன்று உத்தியோகத்தர்கள் பதில் கடமை மற்றும் கடமை மேவுகை செய்யும் அடிப்படையில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களில் நம்பிக்கைப் பொறுப்பிலுள்ள பதவிகளுக்காக மீளாய்வாண்டின் போது ஊதியமாக ரூபா 1,309,320 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த நியமனங்கள் தாபன விதிக்கோவையின் 6 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் ஊதியங்களும் தாபன விதிக் கோவையினதும் ஏனைய சுற்றறிக்கைகளினதும் ஏற்பாடுகளுக்கு முரணான விதத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்பித்தல்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்கள் 2015 ஒக்தோபர் 06 ஆந்

திகதி அதாவது 8 மாத கால தாமதத்தின் பின்னரே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்**

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது கடை வாடகை வருமானம், வாகனத் தளத்தின் வருமானச் சேகரிப்பு, சம்பளக் கொடுப்பனவு, பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை, கழிவுப்பொருட்களை அகற்றும் செலவினம் மற்றும் கழிவுப் பொருள் தாங்கியை அகற்றலில் நட்டம் போன்றவையாக ரூபா 89,014,188 கூட்டுத்தொகையான 18 கணககாய்வு ஐய வினாக்கள் தொடர்பாக 2015 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) கொடுப்பனவுகள்
(இ) சொத்துக்களின் பராமரிப்பு